Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 304

செவ்வாய்க்கிழமை 26 செப்ரெம்பர் 2023

புரட்டாதி 09 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## திலீபனின் நினைவேந்தல்களால் சினம் கொள்ளும் அரச தரப்பு!

யாழ்ப்பாணம், செப். 26
தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இம்முறை இலங்கை அரசை சினம் கொள்ள வைத்திருப்பதாக அறியமுடிகின்றது. இளம்தலைமுறையினரிடம் தியாக தீபம் திலீபனின் வரலாற்றைக் கடத்தும் முயற்சியே இந்தத் திடீர் சினத்துக்குக் காரணம். இந்திய அரசுக்கு எதிராக 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாமல் ஒரு துளி நீர் அருந்தாமல் போராடி மடிந்தவர் தியாக தீபம் திலீபன். அவரது நினைவு தினம் தாயகத்தில் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இம்முறையும் அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன. முன்னெப்போதும் இல்லாத வகையில் நினைவேந்தலைத் தடுப்பதற்கான பிரயத்தனங்கள் பல வழிகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. »11




தியாக தீபம் திலீபனின் பட்டினிவேள்வி

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## தமிழர் தாயகத்தில் இன்று எழுச்சியான நினைவுகூரல்

### ஊர்திப் பவனிகளும் இன்று நல்லூருக்கு வந்துசேரும்

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 26**

**அஹிம்சாவாதியின் தேசம் என்றழைக்கப்படும் பாரதத்துக்கு - இந்தியாவுக்கு எதிராக அதே அஹிம்சை வழியில் போராடி மடிந்த தியாக தீபம் திலீபனின் 36ஆவது நினைவேந்தலை எழுச்சியுடன் நினைவுகூருவதற்கு தாயகத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.** »11

## புலிகளின் புதையலைத்தேடி முள்ளிவாய்க்காலில் வேட்டை

முல்லைத்தீவு, செப். 26
முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் வெடிபொருள்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைத் தேடி தோண்டும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது. »11

## ஐ.எம்.எப். உடன்படிக்கை எமது ஆட்சியில் மீளாய்வுக்கு

### நேருக்கு நேர் கூறினார் சஜித்



கொழும்பு, செப். 26
சர்வதேச நாணய நிதியத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டுள்ள உடன்படிக்கை, ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின்போது மீளாய்வுக்குட்படுத்தப்படும் என்று ஐ.எம்.எப். பிரதிநிதிகளிடம், எதிர்க் »11

## புதிய சட்டவரைவுகள் ஜனநாயக சாபக்கேடு

### பீரிஸ் காட்டம்



கொழும்பு, செப். 26
வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு மற்றும் நிகழ்நிலை காப்பு »11

## பருத்தித்துறையில் திலீபனுக்கு நினைவேந்தல்!

யாழ்ப்பாணம், செப். 26
தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பருத்தித்துறை, மருதடி பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபியில் நேற்றுத் »11

## வித்தியா கொலை வழக்கில் கைதான டி.ஐ.ஜி.க்கு 5 ஆண்டுகள் சிறை

கொழும்பு, செப். 26
சப்ரகமுவ மற்றும் வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித்ஜயசிங்கவுக்கு 5 வருட சிறைத்தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்துள்ளது.
பிரேமலால் ஜயசேகரவை கைது செய்ய வேண்டாம் என அழுத்தம் கொடுத்த குற்றச்சாட்டில் இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. »11

## வாகன வரிப்பத்திரம் வழங்கல் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 26
வாகன வரிப்பத்திரம் வழங்கும் புதிய நடைமுறையை எதிர்வரும் 3ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக மேற்கொள்ளப்படும் முன்னாயத்த நடவடிக்கை »11

## சரணடைந்த சிவாஜி பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 26
யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த வழக்கில் முன்னிலையாகாத காரணத்துக்காக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ்த் தேசியக் கட்சி செயலர் எம்.கே.சிவாஜிலிங்கம் நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்ததையடுத்து பிடியாணை ரத்துச் செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-ஓ,100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபா வைரஸ் தொற்று பாதுகாப்பு அவசியம்!

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

'நிபா' வைரஸ் தொடர்பில் சமூகத்தில் பேசப்பட்டுவரும் பின்னணியில் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 'நிபா' வைரஸ் தொடர்பில் அவதானம் செலுத்தி வருகின்றோம். உலக சுகாதார ஸ்தாபனத்தின் உரிய ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

'நிபா' வைரஸ் 1999ஆம் ஆண்டு மலேசியாவின் பன்றிப் பண்ணைகளில் முதன்முதலில் கண்டறியப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு பங்களாதேஷ் மற்றும் கிழக்கு இந்தியாவில் இந்த நோய் பரவியதுடன், கேரளா கடந்த ஐந்து ஆண்டுகளில் நான்காவது முறையாக இந்த தொற்றுநோயை எதிர்கொண்டுள்ளது. 'நிபா' வைரஸால் இந்தியாவில் இதுவரை 6 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், இருவர் உயிரிழந்துள்ளனர். (எ-இ)



# மக்கள் குரலை அடக்க முயற்சி

## ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 26

**நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்கள் தொடர்பில் மக்கள் பேசுவதை தடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவை முற்றாக எதிர்க்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்துக்கு எதிரான விடயங்களை மக்கள் பேசுவதைத் தடுப்பதற்காக நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவை ஜனாதிபதி அறிமுகப்படுத்தியுள்ளார். இவ்வாறான ஒடுக்குமுறைகளுக்குத் தயாராக வேண்டாம் என்று ஜனாதிபதியிடம் வேண்டுகின்றோம். பொதுஜன பெரமுனவினருடன் இணைந்து பழிகளை ஏனையோர் மீது சுமத்தி, மக்களின் குரலை ஒடுக்க முயற்சிப்பதை விடுத்து, எம்முடன் நேருக்கு நேர் போராட வேண்டும் என்று ஜனாதிபதிக்கு சவால் விடுக்கின்றோம்.

அரசமைப்புப் பேரவையின் ஊடாகவே ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும். அவ்வாறு நியமிக்கப்பட்டால் தான் அவை ஓரளவேனும் சுயாதீனமாகச் செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், நிகழ்நிலை காப்பு ஆணைக்குழுவானது நேரடியாக ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ளது. இந்த ஆணைக்குழுவின் நியமனத்தில் அரசமைப்புப் பேரவையின் எந்தவொரு தலையீடும் இல்லை.

உண்மைகளை தீர்மானிப்பதும் இந்தக்குழுவே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில் மஹிந்த சிறிவர்த்தன, அஜித் நிவாட் கப்ரால் ஆகிய இருவரில் யார் உண்மையைக் கூறுகின்றனர் என்பதை இந்தக் குழுவால் அறிய முடியுமல்லவா? அவ்வாறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் நிவாட் கப்ரால் தான் உண்மையைக் கூறுகின்றார் என்றே இந்த ஆணைக்குழு தெரிவிக்கும் - என்றார். (எ-இ)

### ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்

# சர்வதேச விசாரணை அவசியமில்லையாம்

## மல்கம் ரஞ்சித் கூறுகின்றார்



கொழும்பு, செப். 26

உயிர்த்தஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியமில்லை என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில்உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த விடயம் தொடர்பில் அரசியல் தலையீடு இன்றி சுயாதீன விசாரணை நடத்தினால் போதுமானது. அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிந்து, தவறு செய்தவர்களை காப்பாற்ற முயற்சிக்காது விசாரணை முன்னெடுக்கப்படுமானால் போதுமானது. இந்த விடயத்தில் உண்மைகளைக் கண்டறிய உரிய பொறிமுறைகள் ஊடாக வெளிப்படையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின் சர்வதேசத்தை நாட வேண்டிய அவசியமில்லை - என்றார். (எ-இ)

# யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மரபுவழி ஆற்றுகையாளரை ஊக்கப்படுத்தவும் நலிந்து செல்லும் கூத்துமரபுக்கு புத்துயிர் கொடுக்கவும் 'யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி' அடுத்த மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டியில் முதலாம், இரண்டாம் பிரிவுகள் பாடசாலை மாணவர்களுக்காகவும், மூன்றாம் பிரிவு திறந்தபோட்டியாகவும் அமையவுள்ளது. போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

முதலாம் பிரிவில் தரம் - 6 தொடக்கம் 9 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். இரண்டாம் பிரிவில் தரம் - 10 தொடக்கம் 13 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். மூன்றாம் பிரிவு திறந்தபோட்டியாக நடைபெறும். இதில் 20 வயது தொடக்கம் 35 வயது வரையிலான ஏனையவர்கள் பங்குபற்றலாம்.

ஒருவரே தனி ஆற்றுகையாளராக பங்கேற்கும் இப்போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்குபற்ற முடியும். விண்ணப்பங்களை திருமறைக் கலாமன்றம், இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம். (ம)

# தயாசிறிக்கு பதவி இல்லை

## மைத்திரி உடும்புப்பிடி

கொழும்பு, செப். 26

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எந்த நேரத்திலும் கட்சியில் இணைந்து கொள்ளலாம். அவரை ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால் அவருக்கு எந்தப் பதவியையும் வழங்கமுடியாது என்று சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் உபஅமைப்புப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். கட்சியின் செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகரவை நீக்கும் தீர்மானம் தொடர்பில், மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களுக்கு மைத்திரிபால சிறிசேன விளக்கமும் வழங்கியுள்ளார். (எ-இ)

# ரூ.300 மில். பெறுமதியான கொக்கெய்ன் கண்டுபிடிப்பு

## சந்தேகநபர் கைது

கொழும்பு, செப். 26

4 கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளை வைத்திருந்த கென்ய பிரஜை ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேசவிமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட கொக்கெய்னின் மதிப்பு சுமார் 300 மில்லியன் ரூபா என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

34 வயதான கென்யரான இவர் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து கட்டார் நாட்டின் தோஹா ஊடாக இலங்கை வந்துள்ளார். மூன்று பிஸ்கட் கொள்கலன்களில் கொக்கெய்ன் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை சோதனையின்போது கண்டறியப்பட்டுள்ளது.

கென்ய நாட்டவர் தடயப் பொருள்களுடன் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-இ)

# பீல்ட் மார்ஷல் பதவிக்காக மைத்திரியிடம் கெஞ்சவில்லை

## சரத் பொன்சேகா பதிலடி

கொழும்பு, செப். 26

பீல்ட் மார்ஷல் பதவியை வழங்கவேண்டும் என்று நான் மைத்திரிபால சிறிசேனவின் காலைப்பிடித்துக் கெஞ்சவில்லை. மைத்திரிபால சிறிசேன தேர்தல் வாக்குறுதியை மட்டுமே நிறைவேற்றினார் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வெலிஓயாவில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். சரத் பொன்சேகா தனக்கு பீல்ட் மார்ஷல் பதவியை வழங்க வேண்டும் என்று தனது காலைப்பிடித்துக் கெஞ்சினார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## திலீபனே! தமிழர் தீரனே

விடுதலைப் பறவையொன்று
வாடிக் கிடந்தது
நீரும் அருந்தாமல்
உடலம் சுருண்டது

விடுதலைக் குயிலின்று
கூவமறந்தது
விடுதலைக் கானமதை
விண்ணில் இசைத்தது

காந்தியின் தத்துவங்கள்
கருகியே மாண்டன
அமைதிகாக்க வந்தவர்கள்
சமாதிகட்ட முனைந்தார்கள்

பார்த்தீபன் பற்றுறுதி
பாரெல்லாம் ஒலித்தது
ஐந்தம்சக் கோரிக்கைகள்
அடக்கப்பட்டு மறுக்கப்பட்டன

நல்லூரின் வீதியிலே
நாயகனாய் நீயிருந்து
அணுவணுவாய் உனைவருத்தி
அகிம்சையின் சொரூபமானாய்

தியாகத்துக்கே பெருமைசேர்த்த
திலீபனே! தமிழர் தீரனே
வானத்துச் சூரியனே
வண்ணத்தமிழ் நாயகனே!

தமிழினத்தின் விடிவிற்காய்
உனையுருக்கி ஒளிதந்தாய்
தேசத்தை நேசித்து
உறுதியின் உறைவிடமானாய்

களம்தனில் உன்வீரம்
காதுகளில் சொல்வீரம்
உலகெலாம் உண்ணாநோன்பின்
உன்னதம் புரியவைத்தவனே!

மரணத்தை வென்றுவாழும்
மருத்துவ மைந்தனே
உலகமது உள்ளவரை
உன்தியாகம் பேசப்படும்

- கிருஷ்ணவேணி சிங்கராஜன் -

# அதிகாரத்தைக் கைப்பற்றவே இன, மத மோதலுக்குத் தூபம்!

## தம்மரத்ன தேரர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, செப். 26**

**அதிகாரத்தைக் கைப்பற்றவே அனைத்துத் தரப்பினரும் போராடுகிறார்கள். இனம், மதம் என்ற போர்வையில் இரத்தம் சிந்த வைக்கவே முயல்கின்றனர். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களே இலங்கையை அதல பாதாளத்துக்குள் தள்ளியுள்ளனர் - இவ்வாறு மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வலவாஹங்குனவெவே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**

மிஹிந்தலை விகாரையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அதிகாரத்தைக் கைப்பற்றவே அனைத்துத் தரப்பினரும் போராடுகிறார்கள். இனம், மதம் என்ற போர்வையில் இரத்தம் சிந்த வைக்கவே முயல்கின்றனர். இதற்கு சிறந்த உதாரணமே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவமாகும். நாட்டு மக்கள் என்ற வகையில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் துன்பத்தையே அனுபவித்து வருகிறோம். நாட்டு மக்களே பயங்கரவாதிகளுடன் இனியும் தொடர்பு கொள்ளாதீர்கள்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களே இலங்கையை அதல பாதாளத்துக்குள் தள்ளியுள்ளனர். அவ்வாறானதொரு தரப்பினருக்கு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற இடமளித்தால் இந்த நாடும் அழிந்து விடும். இது நாட்டு மக்களுக்குச் செய்யும் துரோகச் செயல் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சர்வ மதத்தலைவர்களே நாட்டுக்காக ஒன்றிணையவேண்டும். தொடர்ந்தும் ஏமாற்றக்கூடாது.

நாட்டில் புதிய சட்டங்களை கொண்டு வந்து சுதந்திரமாக கருத்துத் தெரிவிக்கும் உரிமையையும் இல்லாமல் செய்யப் பார்க்கிறார்கள். மெய்நிகர் காப்புச் சட்டத்தின் ஊடாக அதுவே நடக்க இருக்கிறது. இதுபோன்று அரசாங்கத்துக்கு எதிராக கருத்துகளை வெளியிட வேண்டாம் என எனக்கு பல அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. எனது உயிருக்கும் இன்றும் கூட அச்சுறுத்தல் உள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தேன்.

ஆனால் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. நான் அரசாங்கத்துக்குச் சார்பாக செயற்பட்டிருந்தால் அந்தக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருப்பார்கள்.

ஆனால் நான் மக்கள் சார்பில் செயற்படுகின்றமையால் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை - என்றார். (எ-இ)




**இந்தமுறை கம்பஸ் பெடியள் திலீபன்ர நினவேந்தலை கொஞ்சம் வித்தியாசமாவும், பரவலாவும் செய்தவங்கள். கம்பஸூக்குள்ள படத்தை வைச்சு, மாலையைப் போட்டு, தீபத்தைக் கொளுத்தி பன்ரெண்டு நாளும் அஞ்சலி செய்யிறதுதான் இதுவரை அங்க வழக்கமா இருந்தது. இந்தமுறை அப்பிடி கம்பஸூக்குள்ள அஞ்சலி செய்ததோட நிக்காமல், திலீபனைப் பற்றியும், எதுக்காக திலீபன் உண்ணாவிரதம் இருந்தார் எண்டதைப் பற்றியும் எங்கட இளந்தலைமுறைக்கு,அதிலையும் குறிப்பா பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு விளங்கப்படுத்துற மாதிரி நோட்டீஸ் கம்பஸ் பெடியள் குடுத்தவங்கள். சும்மா ஆப்பிட்டபாட்டுக்கு அவசரமா நோட்டீஸைக் குடுத்தால், அதை வாங்கின கையோட கீழ எறியாட்டி இப்பத்தை பெடியளுக்கு பத்தியப்படாது. அந்தக் கதி திலீபன்ர நோட்டீஸூக்கும் வரக்கூடாது எண்டதுக்காக கம்பஸ்பெடியள் ஒரு நல்லவேலை செய்தாங்கள். முதல்ல பள்ளிக்கூடத்துக்க போய், பிரின்சிப்பலின்ர அனுமதியோட பிள்ளையளைக் 'கிரவுண்ட்ஸூக்க' கூப்பிட்டு அவையிட்ட நோட்டீஸைக் குடுப்பினம். பிறகு பிள்ளையளை வட்டமா நிக்கவிட்டு, ஆரும் ஒரு பிள்ளையை நல்ல சத்தமா வாசிக்கச் சொல்லுவினம்.**

**அப்பிடி ஒரு பிள்ளை வாசிக்கேக்க, மற்றவை எல்லாம் கவனமாக் கேப்பினம். பிறகு நோட்டீஸைப் பாப்பினம். அப்பிடியே கொஞ்சமெண்டாலும் திலீபனையும், அவரின்ர தியாகத்தையும் அறிவினம். அதால நோட்டீஸை கிரவுண்ட்ஸூக்க போடாமல், கனபிள்ளையள் பத்திரமா வீட்ட கொண்டுபோனதையும் பார்க்கமுடிஞ்சுது.**

**ஆனால் இப்பிடி ஒரு நல்லகாரியம் நடக்கிறது எங்கட அரசாங்கத்துக்கு, பின்பக்கத்தில பன்னாடையை வைச்சு நெருப்புமூட்டினமாதிரி எரியத் தொடங்கியிருக்கு. உடனேயே அவை எல்லா வலயக் கல்விப்பணிப்பாளர்மாருக்கும் சொல்லி, "கம்பஸ்காரர் திலீபன்ர நோட்டிஸோட வந்தால் பள்ளிக்கூடங்களுக்குள்ள விடவேண்டாம்" எண்டு வாய்மொழியாவும், எழுத்துமூலமாவும் உத்தரவுகள் 'மிராஜ்' வேகத்தில பறந்திருக்கு. அதிலையும் வன்னிப்பகுதியில இந்த உத்தரவு பின்பற்றப்படுகுதோ எண்டு ஆள் விட்டும் அவதானிச்சவையாம். இரவுநேரத்தில ஆமியின்ர புலனாய்வுக்காரரும் பிரின்சிப்பல்மாருக்கு போன் எடுத்து வெருட்டி இருக்கினம். இப்பிடி ஒரு தடை வந்ததும் பிரின்சிப்பல்மார் விசயத்தை கம்பஸ்காரருக்குச் சொல்லி இருக்கினம். "எங்களுக்கு பிரச்சினையில்ல. ஆனால் டிப்பார்ட்மெண்ட் போட்ட ஓர்டரை மீறினால் எங்களுக்கு ஆப்படிச்சிடுவாங்கள்" எண்டு நிலைமையைச் சொல்லி இருக்கினம். அதுக்குப் பிறகு கம்பஸ் பெடியள் பிளானை மாத்திட்டாங்கள். உள்ளுக்க போனால் தானே சிக்கல்? அதால பள்ளிக்கூடம் முடியிறநேரம் வாசல்ல வைச்சு, நோட்டீஸைக் குடுத்து வட்டமா நிக்கவைச்சு, அதை வாசிக்கப் பண்ணிப்போட்டு விட்டிருக்கினம். எல்லா மாவட்டத்திலையும் இந்த நோட்டீஸ் பரப்புரை நல்ல வெற்றி எண்டு கம்பஸ்காரர் சொல்லுறாங்கள். ஆர் கொளுத்தினாலும் தியாகதீபம் அணையாமல் எரிஞ்சு கொண்டேயிருந்தால் சரி.**



– பட்சி

padsi@uthayan.com

## மன்னாரைச் சேர்ந்த பல்கலை மாணவன்

# சாகித்தியன் இறப்புக்கு ஆஸ்துமாவே காரணம்!

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பேராதனைப் பல்கலைக் கழக பல் மருத்துவ பீடத்தின் இரண்டாம் வருட மாணவன் எஸ்.திவின் சாகித்தியனின் இறப்புக்கு அவருக்கு ஏற்பட்ட ஆஸ்துமா நோயே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் முருங்கன் பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.திவின் சாகித்தியன் (வயது -23) என்ற அந்த மாணவன் கடந்த 22ஆம் திகதி அதிகாலை மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டு பேராதனை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது உயிரிழந்தார். (ம-213)

# கைது!

யாழ்ப்பாணம், செப். 26

காரைநகர் வலந்தலை பகுதியில் சட்ட விரோதமான முறையில் வீட்டில் வைத்து சாராயம் மற்றும் பியர் விற்ற குற்றச்சாட்டில் 42 வயதான நபரொருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரகசியத்தகவலுக்கு அமைய பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 24 பியர் போத்தல்களும் 14 சாராயக் குடுவைகளும் (கசிப்போத்தல்) மீட்கப்பட்டன. (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர்களிடையே போட்டி; பச்சிலைப்பள்ளி முதலிடம்



கிளிநொச்சி, செப். 26

கிளிநொச்சி மாவட்டத்தில் மாவட்ட மட்ட பிரதேச முதியோர் கழகங்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வில்லிசையில் பச்சிலைப்பள்ளி பிரதேச முதியோர் கழகம் முதலிடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தால் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு பண்ணிசை, வில்லிசை, பொதுஅறிவு ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் பச்சிலைப்பள்ளி, கண்டாவளை, பூநகரி, கரைச்சி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த முதியோர் கழகங்கள் பங்குபற்றியிருந்தன. (ச-9)




## யாழ். நகர கால்வாய்கள் சுத்தப்படுத்தல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 26

யாழ்.நகரிலுள்ள கால்வாய்களை சுத்தம் செய்யும் பணிகள் யாழ்.நுழைவாயில் அரிமா கழகத்தின் அனுசரணையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில் யாழ். சத்திரச்சந்தியிலிருந்து இந்தச் சேவைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பணிகள் தொடர்ந்து 3 வாரங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)



## தியாக தீபம் திலீபனுக்கு தமிழரசுக்கட்சி அஞ்சலி

கிளிநொச்சி, செப். 26

இலங்கைத் தமிழரசுக் கட்சி கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் தியாகதீபம் திலீபனின் 36ஆவது நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் திலீபனின் திருவுருவப் படத்துக்கு பொதுமக்களால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-113)

## வலைப்பந்தாட்டப் போட்டி: பச்சிலைப்பள்ளி சம்பியன்

கிளிநொச்சி, செப். 26

கிளிநொச்சி 'மாவட்டச் செயலர்' வெற்றிக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி வெற்றிக்கிண்ணத்தை வென்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடப்பாண்டுக்கான இந்தப்போட்டித்தொடர் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் மாவட்டச் செயலக, பிரதேச செயலக அணிகள் மற்றும் ஏனைய திணைக்கள அணிகள் உள்ளடங்கலாக 19 அணிகள் பங்குபற்றின.

இறுதிப்போட்டியில் மாவட்டச் செயலக அணியை எதிர்த்து பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி மோதியது. இதன்போது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிக்கிண்ணத்தை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி தனதாக்கியது. (ச-113)





கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா கடந்த 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ய-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர்கள் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உத்தியோகத்தில் சகஊழியர்கள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**இடபம்:** கடந்த இரண்டு நாள்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் சின்னச் சின்ன பிரச்சினைகள் வரக்கூடும்.

**கடகம்:** உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்களின் அரவணைப்பில் இருப்பீர்கள். தாயாரின் உடல்நிலை சீராகும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**சிம்மம்:** ராஜதந்திரமாகச் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். வியாபாரத்தில் ராஜதந்திரத்தால் லாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**துலாம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். பழைய கடனைப்பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாயாருக்கு வீண் டென்ஷன் வந்துபோகும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பூர்வீக சொத்து பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர் வருகையால் வீடு களைகட்டும்.

**தனுசு:** கடந்த இரண்டு நாள்களாக கணவன்–மனைவிக்குள் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.

**மகரம்:** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரது விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும்.

**கும்பம்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். தோற்றப் பொலிவு கூடும். விலை உயர்ந்த பொருள்களை கவனமாக கையாளுங்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் பிரச்சினை நீங்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஓ பார்த்தா! எம் பார்த்தீபா!

தியாக தீபம் திலீபன் நீராகாரம் கூட அருந்தாமல் உண்ணா நோன்பிருந்து – சாவைக் கண்முன்கண்டும் அஞ்சாமல், அதனை இறுகப்பற்றி, உயிர்துறந்து இன்றுடன் ஆண்டுகள் **36.** விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் என்ற வகையில் சிலர் திலீபனுக்குப் புலிச்சாயம் பூசினாலும், அந்தத் தியாகத் தீயின் உண்ணாநோன்புப் போராட்டத்துக்கும், புலிகளின் ஆயுதங்களுக்கும் கொஞ்சமும் பொருத்தமில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஆயுதப் போராட்டத்தின் வழியாக மக்களின் உரிமைகளை பெற்றுக்கொள்வதையே தனது இலட்சியமாகக் கொண்டிருந்த போதிலும், அந்த அமைப்பைச் சேர்ந்த திலீபனின் போராட்டம் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஆயுதங்களும், இராணுவச் சீருடைகளுமற்ற நிலையில், தமிழ் இளையோரின் ஒரு பிரதிநிதியாகவே – ஐந்து அம்சக் கோரிக்கைகளை பாரத தேசத்திடம் வலியுறுத்தி தன் கண்ணெதிரே சாவை ஏற்று கொஞ்சம் கொஞ்சமாக மாண்ட தியாகிதான் திலீபன்.

தன்னை ஆயுதங்கள் சூழ்ந்திருந்த போதிலும் அகிம்சை என்றால் என்ன என்று 'காந்தியத்துக்கும்' ஒட்டுமொத்த உலகத்துக்கும் பாடம் கற்பித்தவன் திலீபன். அத்தகைய ஒப்பற்ற தியாகச் செம்மலை, 'ஓர் ஆயுததாரி' என்பதான மனநிலையில் இருந்து அணுகுவதென்பதே ஆகப்பெரும் அபத்தம். அந்த இழிசெயலைத்தான் வழக்கம்போன்று மிகநேர்த்தியாக – தருணம் பார்த்து இந்த வருடமும் செயற்படுத்தியது சிறிலங்கா அரசாங்கம். நீதிமன்றங்களும் அவற்றின் நீதித் தராசுகளும் வளைந்து கொடுக்காத நிலையில் இன்றையதினம் தமிழர் தாயகத்திலும் இதர பகுதிகளிலும் உணர்வெழுச்சியுடன் அஞ்சலிக்கப்படுகின்றான் திலீபன்.

திலீபன் ஏன் அகிம்சைப் போரில் குதித்துத் தன்னை ஆகுதியாக்கினான்? என்ற கேள்விக்கோ , அல்லது புலிகள் ஏன் ஆயுதங்களை வரித்துக்கொண்டனர்? என்ற கேள்விக்கோ பதில் தேடுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் இன்றும்கூட கொஞ்சமும் தயாராக இல்லை. இந்த இரு கேள்விகளுக்குமான பதிலும் அதன் சாராம்சமும் ஒன்றுதான். 'அகிம்சை இந்த உலகத்துக்குப் புரியாத மொழி' இதனால்தான் திலீபன் தன்னைத்தானே மாய்த்துக்கொண்டான். 'அகிம்சை' மொழியில் சொல்லப்பட்ட கோரிக்கைகள் செவிசாய்க்கப்பட்டிருந்தால் திலீபனின் உயிர் பறிபோயிருக்காதே. ' அதிகாரத்தரப்புகளிடம் அகிம்சையால் பேசுவது பயனில்லை' என்பதைத்தான் திலீபன் தன் சாவுமூலம் மக்களுக்கு உணர்த்தினான். புலிகள் ஆயுதங்களை வரித்துக்கொண்டமைக்கான காரணமும் அதுவேதான்.

ஆனால் திலீபனின் தியாகத்தையும், ஈழத்தமிழரின் வாழ்வியலில் அவன் எவ்வளவுதூரம் தவிர்க்கப்பட முடியாதவன் என்பதையும் அடுத்த சந்ததிக்குச் சரிவரக் கடத்துகின்றோமா? என்றால் அதற்குரிய பதில் நிச்சயம் 'தொலைநோக்குப்பார்வை' கொண்டதாக அமையாது. திலீபனை அஞ்சலிப்பது என்ற பெயரில் வாகனப்பவனிகளை நடத்துவதையோ அல்லது எழுச்சிக் கீதங்களை இசைக்க விடுவதையோ நாம் முழுமையான அஞ்சலிப்பாகக் கொள்ளமுடியாது. அஞ்சலிப்புகள் ஆத்மார்த்தமான உள்ளுணர்வுடன் இரண்டறக் கலந்தவை. திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகளை இன்று எத்தனை இளைஞர்கள் தெரிந்து வைத்திருக்கின்றனர்? கட்சிகளை முதன்மைப்படுத்திய அஞ்சலிகளால் இவ்வாறான வரலாறுகளை முழுமையாக ஊடுகடத்திவிடமுடியாது. திலீபன் ஏன் சாவை கண்முன் நேசித்தான்? தாயகத்துக்கு ஏன் திலீபன் தேவைப்பட்டான்? என்ற தெளிவை ஒவ்வொருவரும் தம் இளைய சந்ததிக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். பலஸ்தீனத்தின் பெருந்தலைவர் யாசிர் அராபத்தை உயிருக்கு நிகராக நேசிப்பவர்களாகத்தான் அந்த நாட்டின் இளைஞர்களும் சிறார்களும் இன்றிருக்கின்றனர். ஏனெனில் அராபத் 'தமக்காக வாழ்ந்த கடவுள்' என்ற பொதுப் புரிதலை பலஸ்தீனப் பெற்றோர் தம் குழந்தைகளுக்கு ஊட்டுகின்றனர். அதுதான் இங்கு காலத்தேவையாகவும் இருக்கின்றது.

பெற்றோரே!!! கட்சிக்கொடிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் அஞ்சலிப்புகளை விட வரலாற்றைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுப்பது பல மடங்கு நேர்த்தியான – மேலான செயலாகவே அமையும். திலீபனைக் கற்றுக்கொடுங்கள். அவன் கொள்கைகளைப் புரியவையுங்கள். அவன் உண்ணாநோன்பிருந்த நாள்களில் ஒரு நாளின் ஒரு நேரமாவது உங்கள் பிள்ளைகளை திலீபனுக்காக உண்ணாநோன்பிருக்கப் பழக்கப்படுத்துங்கள். அதைத்தான் திலீபன் நேசிப்பான். ஏனெனில் திலீபன் தமிழ் மக்களை எல்லையற்றுக் காதலித்தான்.

**“என் மக்கள் மீதுள்ள தாளாத பாசத்தின் பேரில், அவர்களின் விடிவுக்காக நான் 651ஆவது விடுதலைப் புலியாக என் தோழர்களை நோக்கி மெதுவாகப் போய்க்கொண்டு இருக்கின்றேன்.”**

– திலீபன்

## நாளொரு நல்வார்த்தை

நான் பொதுவாக வார்த்தைகளால் அல்ல செயலால் மட்டுமே பேச வேண்டும் என்று நினைக்கிறேன்.

– முகேஷ் அம்பானி




# சீனக்கப்பல் விவகாரம்: அமெரிக்காவும் கரிசனை

கொழும்பு, செப்.26

**சீன ஆராய்ச்சிக் கப்பல் இலங்கைக்கு வருவது தொடர்பாக அமெரிக்கா கரிசனை வெளியிட்டுள்ளது.**

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடனான சந்திப்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச்செயலாளர் விக்டோரியா நூலண்ட் இந்த விவகாரம் தொடர்பான அமெரிக்காவின் கரிசனையை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத் தொடருக்காக அமெரிக்கா சென்றபோதே வெளிவிவகார அமைச்சர் விக்டோரியா நூலண்டைச் சந்தித்துள்ளார்.

நடுநிலை நாடு என்ற வகையில் வெளிநாட்டுக் கப்பல்கள், விமானங்கள் இலங்கைக்குள் தங்களது நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிப்பது தொடர்பான நிலையான செயற்பாட்டு முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து நாடுகளுடனும் ஒரே மாதிரியான அணுகுமுறையையே இலங்கை பின்பற்றுகின்றது என்றும் இந்த நடைமுறையில் இருந்து சீனாவை மட்டும் விலக்கி வைக்க முடியாது என்றும் வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# பச்சிளம் குழந்தைகள் பணத்துக்கு விற்பனை

## கண்டியில் சம்பவம்

பச்சிளம் குழந்தைகளை பணத்துக்காக விற்பனை செய்யும் மோசடி கண்டி மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது. இந்த மோசடி மருத்துவமனையில் பணிபுரியும் சிற்றூழியர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் நாவுல பொலிஸாருடன் இணைந்து கடந்த சனிக்கிழமை முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது மருத்துவமனையில் பணிபுரியும் ஒருவரின் வீட்டில் இரண்டு மாத கைக்குழந்தைகள் இரண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

அவை காலி மற்றும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இரண்டு குடும்பங்களுக்கு விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் நீதிமன்ற உத்தரவைப் பெற்று இரண்டு சிசுக்களையும் சிறுவர் இல்லத்தில் ஒப்படைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (ச-இ)

# இலங்கையர் இருவர் தமிழகத்தில் தஞ்சம்

யாழ்ப்பாணம், செப்.26

தலைமன்னாரைச் சேர்ந்த இருவர் தஞ்சம் கோரி தமிழகத்தின், தனுஷ்கோடியை நேற்றுக்காலை சென்றடைந்துள்ளனர்.

தலைமன்னாரைச் சேர்ந்த நேசபெருமாள் (வயது-60) மற்றும் மல்வானையைச் சேர்ந்த கலந்தார் லாபீ (வயது-58) ஆகிய இருவரே படகுமூலம் தனுஷ்கோடியின் அரிச்சல்முனையைச் சென்றடைந்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

தற்போது இவர்கள் இராமேஸ்வரம் மரைன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (எ-100)

## நாளை

27.09.2023

புதன்கிழமை

புரட்டாதி 10

சுபநேரம் : 04.32 - 06.06

ராகுகாலம் : 12.02 - 01.32

பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திர சிகிச்சைகளுக்கு விரைவில் வரிசையுகம்

## மருத்துவர் செந்தூரன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப். 26

**நாட்டில் நிலவிவரும் சுகாதாரத்துறை நெருக்கடிகளுக்கு உரிய தீர்வு காணப் படாவிடில் எதிர்வரும் காலத்தில் சத்திரசிகிச்சைகளுக்காக பொது மக்கள் வரிசையில் நிற்கும் நிலை ஏற்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக் கிளையின் செயலாளர் மருத்துவர் சிவச் சந்திரன் செந்தூரன் தெரிவித்தார்.**

சுகாதாரப் பெருநெருக்கடிக்கு எதிராக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- சுகாதாரத்துறை எதிர்நோக்கிவரும் பிரச்சினைகளை உள்ளடக்கி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் எட்டு அம்சக் கோரிக்கைகளை அர சுக்கு அனுப்பிய போதிலும் அதனை அரசு நிராகரித்துள்ளது. அதனை நிறைவேற்ற வலியுறுத்தியும், சுகா தாரத்துறையில் நிலவிவரும் நெருக்கடிகள், மருத்துவர்கள் மற் றும் சுகாதாரத்துறை ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசு உரிய தீர்வைக் காண வலி யுறுத்தியும் தொடர்ந்து போராட்டங் களை முன்னெடுத்து வருகின்றோம்.

மருந்துக் கொள்வனவில் இடம் பெறும் பிரச்சினைகள் தீர்வின்றித் தொடர்கின்றன. மருத்துவமனைக் குத் தேவையான அளவைவிடக் குறைவான மருந்துகளே அரசாங்கத் தால் வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படுவதும் தரமற்ற மருந்துக ளாகவே விநியோகம் செய்யப்படுகி றது. மருத்துவ உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இவ்வாறான நிலை தொடருமானால் சத்திரசிகிச்சைகளுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்படும். மருத்துவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாததால் பெரும்பாலான மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளி யேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், இலவச மருத்துவச்சேவை முடங்கும் நிலை ஏற்படும். ஆகவே மக்களுக்கான இலவச மருத்துவச் சேவையை தடையின்றி முன்னெ டுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறான நிலை தொடருமாயின் தனியார் மருத்துவத்துறையை நோக்கிச் செல்ல வேண்டிய இக்கட் டான நிலைக்கு மக்கள் தள்ளப்படு வார்கள்.

இலவச மருத்துவச்சேவையை முடக்கி மருத்துவத்துறையை தனியா ருக்கு தாரைவார்க்கும் நோக்கத்தில் தான் இவற்றுக்கு உரிய தீர்வை காணாது அரசு இழுத்தடித்து வரு கின்றது - என்றார். (ம-100)

## சிலாவத்துறை சுற்றுவட்டம் ரூ.84 மில்லியன் ஒதுக்கீடு!

மன்னார், செப். 26

மன்னார் - முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிலாவத்துறை சுற்று வட்டம் அமைப்பதற்கு 84 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அதற்குரிய பூர்வாங்கப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலை வருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

அத்துடன் நகர அபிவிருத்திச் சபையுடன் பேச்சு நடத்தி, மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து, அமைச்சர் பிரசன்ன ரண துங்கவின் உதவியுடன் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-213)



தியாகதீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் முல்லைத்தீவு, மூங்கிலாறு தெற்கு புதியநிலை விளை யாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. (ம-27)

# ரூ.47 இலட்சத்தைக் கடந்த குடும்பக் கடன் சுமைகள்

## ஆய்வில் தகவல்

கொழும்பு, செப். 26

நாட்டில் 4 பேர் கொண்ட குடும்பம் ஒன் றின் கடன் சுமை 47 இலட்சம் ரூபாவைக் கடந்துள்ளது என்று பேராதனைப் பல் கலைக்கழகத்தின் பொருளியல்துறை முன்னெடுத்த ஆய்வில் தெரியவந் துள்ளது.

இதுதொடர்பில் பேராசிரியர் வசந்த அத்து கோரல தெரிவித்ததாவது:- நபரொரு வரின் கடன் சுமை 7 இலட்சம் ரூபாவை அண்மித்துள்ளது. நாட்டின் சகல பிரஜை கள் மீதும் கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தி லிருந்து இந்த வருடத்தின் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா கடன் சுமை பொறிந்துள்ளது. அரசாங்கம் வெளிநாடு களிலிருந்து பெற்றுக்கொள்ளும் கடன் காரணமாக ரூபாவின் பெறுமதி வீழ்ச் சியே தனிநபர் கடன் அதிகரிப்புக்கு பிர தான காரணம் - என்றார். (ச-இ)



தியாகதீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டின் நினைவு தினத்தை முன்னிட்டு சுதந்திரபுரம் வினோதன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மரதன் ஓட்டப் போட்டி கிளிநொச்சி முருகானந்தா மத்திய கல்லூரி முன்பாக நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

40 க்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் இதில் கலந்துகொண்டனர். (ம-113)

## வாசிப்பை ஊக்கப்படுத்த நெடுந்தீவில் செயற்றிட்டம்

நூலகப் பயன்பாடு அருகிவரும் நிலையில் அதனை ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு நெடுந்தீவு பாடசாலை உயர் வகுப்பு மாண வர்களிடையே 'வாசிப்பை நேசிப்போம்' எனும் தொனிப்பொருளில் செயற்றிட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொறியியலாளர் கே.யோகேந்திரன் நினைவு நூலகத்தின் நிதியனுசரணையில் இந்தச் செயற்றிட்டம் இடம்பெறுகிறது.

இந்தச் செயற்றிட்டத்தில் பங்கெடுக்க வேண்டுமாயின், நெடுந்தீவைப் பிறப்பிட மாகக் கொண்ட எழுத்தாளர்களால் எழுதி வெளியிடப்பட்ட நூல் ஒன்றை வாசித்து அந்த நூல் குறித்த ஆய்வுக் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும். அதற்கமைய கட்டுரை எழுதுவதற்காக வாசித்த நூலின் பெயர், அதன் எழுத்தாளர் என்பவற்றைக் குறிப்பிட்டு 'பொறியியலாளர் கே.யோகேந் திரன் நினைவு நூலகம்' 'வாசிப்பை நேசிப்போம்', மே/பா செ.மகேஷ், 11ஆம் வட்டாரம், நெடுந்தீவு எனும் முகவரிக்கு எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதிக்கு முன்பதாக அனுப்பப்பட வேண்டும்.

இந்த நூலாய்வுக் கட்டுரை எழுதும் செயற் றிட்டத்தில் பங்கேற்கும் அனைத்து மாண வர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படும் என்றும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (சு)

# இராஜாங்க அமைச்சரின் மாமனார் சுட்டுக்கொலை

## காலியில் பயங்கரம்!

இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்கவின் மாமனார் காலியில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துவருகின்றனர்.

காலி நகரில் பிரபல வர்த்தகர் என தன்னை அடையா ளப்படுத்திக்கொள்ளும் லலித் வசந்த மெண்டிஸை (வயது-61) இலக்கு வைத்து அவர் பயணித்த கார்மீது நேற்றுமுன்தினம் இரவு, மோட்டார்சைக்களில் பய ணித்த இருவர் சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியுள் ளனர். காலி நகரில் இருந்து தமது வீட்டுக்குப் பயணித் துக்கொண்டிருக்கையிலேயே காலி டிக்சன் வீதிப் பகுதியில் வைத்து அவர்மீது இவ்வாறு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. ரி-56 ரக துப்பாக்கிமூலமே சூடு நடத்தப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்கவின் மனைவி யின் தந்தையே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார். இவர், நிழல் உலக தாதாவும், போதைப்பொருள் கடத்தல் காரருமான ரத்கம விதுரவின் உறவினர் எனவும் தெரியவந்துள்ளது. (ம-44)

# வங்காலை சுவிஸ் அமைப்பால் மன்னாரில் மரக்கன்றுகள் நடுகை



மன்னார், செப். 26

மன்னார் மாவட்டத்தில் கல்வி விளையாட்டு கலை மற்றும் சமூக அபிவிருத்தி போன்ற அபி விருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவரும், சமூக அபி விருத்தி குழுவான வங்காலை சுவிஸ் அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் - வங்காலை புனித அன்னாள் ஆரம்பப் பாடசாலை வளாகத்தில் புங்கை மரக்கன்று கள் நடப்பட்டன.

இந்த நிகழ்வு 'இயற் கையை நேசித்து மரங்களை நடுவதன் மூலம் வெப்பத்தை தணிப்போம்' எனும் தொனிப்பொருளில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் வங்காலை புனித அன்னாள் ஆரம்பப் பாடசாலை யின் அதிபர் அருட்சகோதரி எஸ். றொஷாந்தி, வங்காலை புனித அன்னாள் தேசியப் பாடசாலை யின் அதிபர் பிரான்சிஸ் ஸ்டான்லி டிமெல், பாடசாலை பழைய மாணவ சங்கத்தினர், ஆசிரியர்கள் மாணவர்கள், வங் காலை சுவிஸ் அமைப்பினர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ச-213-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்டது

எனது (புஸ்பராஜ் சசிகலா) தேசிய அடையாள அட்டை இல.(775074833 V), வங்கி புத்தகம், ATM அட்டை, திறப்புக்கோர்வையும் யாழ். பஸ்தரிப்பிடத்திற்கும், யாழ். வைத்தியசாலை பகுதி சுபாஸ் ஹோட்டலுக்கும் இடையே தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொள்ளவும்.

**077 855 2525** (cs.52273) (N.1)

## பெருந்திருவிழா


உரும்பிராய் பரத்தைப்புலம் ஸ்ரீ கருணாகரப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா கடந்த 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகின்றது. நாளை புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ஒ-இ)

## துயர் பகிர்கின்றோம்....

பெருங்குளம் சந்தியை பிறப்பிடமாகவும் நுணாவில் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட

### சதாசிவம் தவச்செல்வம்

(உரிமையாளர் செல்வம் கூல்பார் - சாவகச்சேரி)



அவர்கள் நேற்றுமுன்தினம் (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

எனது உடன் பிறவா சகோதரனும் பிறர் மத்தியில் அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய நீண்ட கால அனுபவம் வாய்ந்த வர்த்தகருமாவார்.

சகோதரனுடைய இழப்பு மிக்க மனவருத்தமளிக்கின்றது அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!

அன்னாரின் பிரிவால் துயருறும்

S. மணிவர்ணன் குடும்பம்
கல்வியங்காடு வடக்கு,
நல்லூர்.

வாணி புடைவையகம்
இல.81 பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம் (சாவகச்சேரி)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



### வடிவேலு பாக்கியவதி (குஞ்சியம்மா)

சரவணையை பிறப்பிடமாகவும், நாரந்தனை, தற்போது புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு பாக்கியவதி (குஞ்சியம்மா) 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை இராசமணி தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா தெய்வானப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற வடிவேலு (ராசுக்குஞ்சி ஐயா - ஆசாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மலர், பாலசுந்தரம் மற்றும் திருச்செல்வம் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான வில்வராசா, ஜெயந்தி மற்றும் சரோஜாதேவி (தயா - கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, முத்துராசா, பூமணி, சரஸ்வதி மற்றும் ருக்மணி, தாரணதேவி, காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, சிவசுப்பிரணியம், இராஜேஸ்வரி, குலேந்திரன் மற்றும் சர்வேஸ்வரி, ஜெகதீஸ்வரி (ஈஸ்வரி - பிரான்ஸ்), பிறேமலா, பிறேமரூபன் (கொலண்ட்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2023) செவ்வாய்க்கிழமை அவரது புளியங்கூடல் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 09.00 மணியளவில் சரவணை பிண்டங்கன்னி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

திருச்செல்வம் (பிரான்ஸ்)
+33 6 52 63 85 75

சரோஜாதேவி (தயா - கொலண்ட்)
+31 6 16569401

ருசாந்த் (யாழ்ப்பாணம்)
+94 77 979 1408

தகவல்:
குடும்பத்தினர்

(cs.44723) (2.6)


## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
### மானிப்பாய்

**சத்திரசிகிச்சை பிரிவு ஆரம்பம்**



சத்திரசிகிச்சை நிபுணர்கள்
Dr.S. மதிவாணன்
Dr.S. கிரிதரன்
அவர்களுடன் மயக்கமருந்து நிபுணர்
Consultant Anaesthetist
Dr.S. பிரேமகிருஷ்ணா

முதல் 10 சத்திர சிகிச்சைகளும் (minor surgery)
அதற்கான மருத்துவ ஆலோசனைகளும்
இலவசமாக வழங்கப்படும்.

021 225 5157
077 066 1031
greenmemorial2010@gmail.com


## 45 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



கடந்த 15.08.2023 அன்று
இறைபதமடைந்த
எமது குடும்பத்தின் குலவிளக்கு

### அமரர் மருதவாணன் கைலைவாணன்

(கைலை)

அவர்களின் 45 ஆம் நாள் நினைவுக் கிரியைகள் இன்று (26.09.2023) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலையில் சபிண்டீகரணமும் நாளை மறுதினம் (28.09.2023) வியாழக்கிழமை பருத்தி அடைப்பு ஊர்காவற்துறையில் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு மதியபோசன நிகழ்விலும் பங்குபெற வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறோம்.


கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய்.

(cs52266) (N.1)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு
10
03
1967



இறப்பு
25
09
2023

### சண்முகம் சத்தியசீலன்

கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும் 65, பாற்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சத்தியசீலன் (சீலன்) நேற்று (25.09.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் பாக்கியம் தம்பதியரின் மகனும், உதயகுமாரியின் அன்புக் கணவரும், கீர்த்தனாவின் (ஆசிரியர் - பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்) பாசமிகு தந்தையும், காசிலிங்கம் ராணியம்மா தம்பதியரின் மருமகனும், சற்குணமணி, சறோஜினிதேவி, புஸ்பராஜ் (கனடா), மஞ்சுளா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமலிங்கம், உதயன் (லண்டன்), சிவராசா, விஜயகௌரி (சுவிஸ்), கமலலோஜினி (கனடா), ஆகியோரின் மைத்துனரும், மதுசா, மவிந்தராஜ், லக்சுதன், இமானுஜன், உஷானி ஆகியோரின் மாமனாரும், வர்சா, அக்ஷயா, பிரசாந், கீர்த்திகரன், பிரனிதா ஆகியோரின் பெரிய தந்தையும், தக்சிதாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2023) செவ்வாய்க்கிழமை இராச வீதி, கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 28376) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 • 12 • 2001

உதிர்வு 26 • 09 • 2018



## பேரின்பநாதன் பிரசாந்தன்

என் அன்பின் ஓவியமே
ஆண்டு ஐந்து ஓடிப்போனாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு
- விலகவில்லையடா
எம் குடும்பத்தில் நீ மீண்டும் வந்துவிட
அதையே நாம் வேண்டுகின்றோம்
அது வரை உன் ஆத்மா இறைவன்
திருப்பாதங்களில் அமைதி காணட்டும்.

தல்லையப்புலம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

உன் பிரிவால் துயருறும்
அம்மா

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 • 09 • 1964

மறைவு 26 • 09 • 2022



## பழனி சிறிதரன்

எத்தனையோ உறவு இருந்தும் அத்தனையும்
கூடவருமா ?
உங்களைப்போல காவல் தெய்வம் இனிமேலும்
கிடைத்திடுமா ?
ஆலமரமே இங்கு வேரோடு சாய்ந்ததே தலையெழுத்தின்
உயிர் எழுத்தும் அழிந்து போனதே
எங்கள் உலகமே இருளுதே அப்பா............
நெஞ்சத்தில் நினைவாய் நிலையாய் என்றும்
எங்களோடு எங்களின் இறைவனாய் என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகிறோம்.

கல்லடி,
தும்பளை வீதி, பருத்தித்துறை.

நீங்கா நினைவில்....
குடும்பத்தினர்

(CS 40637 / N 1)

# மரண அறிவித்தல்

பிறப்பு 27 • 12 • 1935

இறப்பு 25 • 09 • 2023



## முருகேசு வேலுப்பிள்ளை

(செட்டி வெள்ளையர்)

நெடுந்தீவு மேற்கு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், பூதர்மட வீதி, நீர்வேலி தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு வேலுப்பிள்ளை நேற்று (25.09.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற பொன்னம்பலம் தங்கம்மா தம்பதியரின் மருமகனும், சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சீதேவிப்பிள்ளை, கணபதிப் பிள்ளை, பத்தினிப்பிள்ளை, கந்தப்பு மற்றும் தங்கம்மா (கனடா) ஆகியோரின் சகோதரனும், துரைசிங்கம் (கனடா), லோகேஸ்வரன் (ஓய்வுநிலை பரிசாரகர் - அச்சுவேலி, வைத்தியசாலை), கருணதேவி (கனடா), கோணேஸ்வரி (கோப்பாய்), தோகைநாயகி (ஆசிரியர் - அனிச்சங்குளம் மகா வித்தியாலயம் - மல்லாவி), நவரட்ண சிங்கம் (நெடுந்தீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லதா (கனடா), நிர்மலா (ஆசிரியர் - யா / கோப்பாய் சரவணபவானந்த வித்தி), கரிகரன் (கனடா), காலஞ் சென்ற பாலச்சந்திரன், சதானந்தம் (மல்லாவி), நித்தியகலா (ஆசிரியர் - ஸ்ரீ ஸ்கந்த வித்தி - நெடுந்தீவு) ஆகியோரின் மாமனாரும், ஆதவன், மகிழன், ஆரதி, விகிர்ஷன், சுதர்ஜனன், அபிராம், கஜானான், அபிநயன், சங்கவி, கிருஷ்ணராஜ், ஜனகராஜ், ஜசிதராஜ், கமலினி, பிரசாத், அகவளவன், அகவதனன், அகப்பிரியன், வஸ்மிகன், லக்ஷயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

பூதர்மட வீதி,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
சிறி (மகன்) 077 833 2311
றங்கன் (பேரன்) 077 280 4948

(ct. 40646) (N-1)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 14 • 07 • 1947

இறப்பு 27 • 08 • 2023



கடந்த (27.08.2023)ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

அமரர்

## ஆறுமுகம் துரைசிங்கம் (கோபால்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (26.09.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வெண்புறா வீதி,
2 ஆம் வட்டாரம், கைவேலி,
புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்
077 205 5526
077 126 4233

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டுக்கு தாவியோர் மீண்டும் தாய்வீட்டுக்கு

சுதந்திரக் கட்சியை கைவிட்டு மொட்டுக் கட்சி பக்கம்தாவிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்சிலர் மீண்டும் சு.க.வில் இணைந்து செயற்படுவது தொடர்பில் அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன்பேச்சு நடத்தியுள்ளனர். மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, நளின் பெர்னாண்டோ மற்றும் அநுரபிரியதர்சன யாப்பா உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். மூவரும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டும் நிமல் லான்சா அணியின் முக்கியமான உறுப்பினராக அநுர பிரியதர்சன யாப்பா செயற்படுகின்றார். எனவே, சுதந்திரக்கட்சியில் இணைந்து, அந்தக்கட்சியையும் அரசுடன் இணைக்கும் நகர்வாகக்கூட இந்தச்சந்திப்பு இடம்பெற்றிருக்கலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ஓ-44)



# ஹாட்லியில் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 26

ஹாட்லிக் கல்லூரியால் நடத்தப்படும் கல்விக் கண்காட்சி நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது.

ஹாட்லிக் கல்லூரி வளாகத்தில் நேற்று காலை 8 மணிக்கு ஆரம்பமான கல்விக் கண்காட்சி மாலை 4 மணி வரை இடம்பெற்றது. தொடர்ந்து இன்று இரண்டாவது நாளாகவும் இடம்பெறவுள்ள கண்காட்சி இன்று 4 மணியுடன் நிறைவடையவுள்ளது.

சைவம், கிறிஸ்தவம், பௌத்த சமயங்கள், தமிழ், ஆங்கிலம் மொழிகள், அறிவியல் உள்ளிட்ட 25 பிரிவுகளில் ஹாட்லிக் கல்லூரி மாணவர்களால் காட்சிப்படுத்தல்கள் இடம்பெற்றுள்ளன. பெருமளவான மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் இதில் பங்கேற்று வருகின்றனர்.

காலை 8 மணி தொடக்கம் பி.ப. 1.30 வரை பாடசாலை மாணவர்களுக்கும் பி.ப. 1.30 தொடக்கம் 4 மணி வரை பொது மக்களுக்கும் கல்விக்கண்காட்சியை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-ஒ-100)



# அலி சப்ரி பதவி விலகவேண்டும்

## மேர்வின் வலியுறுத்து

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி நாட்டு மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது- ஐ.நா. தொடருக்கு சென்றிருந்த இலங்கைக் குழாமில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரியின் மகனும் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். தனக்கு வேலை அதிகம், தன்னார்வ அடிப்படையில் மகனை இணைத்துக்கொண்டார் என்பது உட்பட பல கதைகளைத் தற்போது அலி சப்ரி கூறிவருகின்றார். இவ்வாறு கருத்துகளை வெளியிடுவதைவிட தவறை ஏற்றுக்கொண்டு அவர் மன்னிப்புக் கோரவேண்டும். வேலைப்பளு அதிகம் என்றால் அமைச்சுப் பதவியைத் துறந்து அதனைப் பொருத்தமான ஒருவரிடம் கையளிக்க வேண்டும். ராஜபக்சக்களுக்கு எதிரான வழக்குகளில் ஆஜரானதால்தான் அலிசப்ரிக்கு தேசியப் பட்டியல் வழங்கப்பட்டது என்றார் மேர்வின் சில்வா. (அ-ஒ-44)


## வேலையாட்கள் தேவை

யாழ் - கொழும்பு அதிசொகுசு பேருந்து சேவை மற்றும் பொதிகள் சேவையில் ஈடுபடும் தனியார் நிறுவனம் ஒன்றின் கொழும்பு அலுவலகத்திற்கு எழுதுநர் பதவிக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ள ஆண்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

வயது எல்லை - 18-40

உணவு மற்றும் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

(CS 52280) A-1

தொடர்பு: 0777 114 226

## விதைநெல், தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

மூன்றரை மாத அதிவிளைச்சல் தரக்கூடிய BG 34.6 இன விதைநெல் குறைந்த காலத்தில் பயன்தரக்கூடிய மற்றும் நல்லின தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு.

(cs 40642) (N-1)

077 659 2044

## பராமரிப்பு சேவை

யாழ். அம்மா முதியோர் காப்பகம். படுக்கை, மன. டிமென்சியா நோயாளிகள், படுக்கைப் புண், பாரிசவாதம் மருத்துவ சேவையுடன் குறைந்த செலவில் பராமரிப்புச் சேவையுமுண்டு.

0777 12 68 60 / 59


## மின்சாரவேலியால் யானை உயிரிழப்பு

முல்லைசெப் 26

கனகபுரத்தில் விவசாயி ஒருவரால் பாதுகாப்புக்காகப் பொருத்தப்பட்ட மின்சார வேலியில் சிக்கிய காட்டு யானை கடந்த 23ஆம் திகதி உயிரிழந்துள்ளது.

முத்தையன்கட்டு மூன்றாம் கண்டம், கனகரத்தினபுரம், மன்னாங்கண்டல் பகுதிகளில் தற்போது காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். தற்போது பனம்பழப் பருவகாலம் என்பதால் பனம்பழத்துக்காகக் காட்டில் உள்ள யானைகள் ஊர்மனைகளுக்குள் வருகின்றன என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (அ-ஒ-19)

## காணவில்லை



பெயர் - அமிர்தவாசகம் செல்வராசா (தலைவர்)

24.09.2023 அன்று காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 485 4840, 077 9716 299, 077 461 6968.

மயான வீதி, மல்லாவம் உடுவில். (மல்லாவம் சந்தை அருகாமை)

(CS 26381) A-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 02 1953



உதிர்வு 26 09 2021

### அருந்தவராசா செல்வராணி

ஓவியம் கலைந்ததென்று
ஓவியர்கள் மறப்பதில்லை
உருக்குலைந்த கோட்டையினை
சரித்திரம் மறப்பதில்லை

நோயின்றி வாழ்ந்திருந்தீர்
நொடிப்பொழுதில் சென்று விட்டீர்
தாயன்பு பொக்கிசமே உம்மை
தலை தாழ்த்தி வணங்குகின்றோம்

கணவன், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

077 5195963

(cr.40641)

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 11 . 1954



மறைவு 23 . 09 . 2023

### செல்வரத்தினம் விக்கினேஸ்வரி

வேரவில் பூநகரியை பிறப்பிடமாகவும் தம்பிராய் பூநகரியை வதிவிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் விக்கினேஸ்வரி கடந்த 23.09.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா தில்லைநாயகி தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசலட்சுமி மற்றும் சிவகுமார் (சிங்கக்குட்டி), உதயகுமார், சூரியகுமார் (கண்ணாயிரம் அரிசி ஆலை), சந்திரகுமார், செல்வலட்சுமி, தவலட்சுமி, விஜயலட்சுமி (மாவீரர்) மற்றும் சந்தானலட்சுமி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி), செல்வகுமார் (லண்டன்), நந்தகுமார் (கனடா), விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற புஸ்பலதா மற்றும் சுசீலா, சிவரூபி, பரமேஸ்வரி, டர்சிகா (லண்டன்), அபராதினி (கனடா), காலஞ்சென்ற முரளிதரன் மற்றும் யோகநாதன், ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சந்திரலேகா மற்றும் சுவர்ணா (கனடா), தவகுமார் (கனடா), ரஞ்சிதமலர் (கனடா), கயிலைநாதன் (மாவீரர்), கிருபாதேவி, தில்லைநாதன் (லண்டன்), கௌரிதேவி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விதுசா (கனடா), ரிதுசா, கதுசன், பதுசன், சபிதா, சுபிந்தா, சுபிந்தன், சஞ்சியா, சரணியா, திலோஜன், கிரிதரன் காலஞ்சென்ற கோபிதரன் மற்றும் கஜிதரன், கவிதரன், கீர்த்தனா, நிரோஜன், நிர்மலன், நிசாந்தன், துவாரகன், தனுகரன், கபிசன், தஸ்மியா, அஸ்விகா, வருண், டினோச், அபிஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தம்பிராய் இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


தகவல்: குடும்பத்தினர்.

(CS 52260) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையில் அண்மையில் போட்டோப்பிரதி இயந்திரத்தை அன்பளிப்பாக பாடசாலையின் பழைய மாணவி விக்னேஷ்வரன் ராதா வழங்கினார். (ய-9)



கைதடி குருசாமி வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு அண்மையில் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. (ய-159)



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெற்றது. (ய-18)




SOS அமைப்பின் அன்னையர் அணியைக் கௌரவிக்கும்முகமாக அன்னையர் தின நிகழ்வு மேற்படி அண்மையில் சிறுவர் கழகத்தால் நல்லூர் SOS சிறுவர் கிராமத்தில் நடைபெற்றது. (ய)



ஏழாலை புனித இசிதோர் முன்பள்ளிச் சிறார்களின் சிறுவர் சந்தை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் இலங்கை வங்கியின் மல்லாகம் கிளை முகாமையாளர் செ.பார்த்தீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறுவர் சந்தையில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கி வைத்தார். (ய-66)



கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் பிரதி ஆணையாளராகக் கடமையாற்றிய இ.நிசாந்தன் ஜனாதிபதி செயலகத்துக்கு பதவி உயர்வு பெற்றுச் சென்றமைக்கான பாராட்டு விழா கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகளின் பங்களிப்புடன் இடம்பெற்றது. கெற்பேலி கமக்கார அமைப்பின் செயலாளர் க.சாந்தகுமார் இ.நிசாந்தனுக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துக் கவிபாடி வாழ்த்துமடல் வழங்கிக் கௌரவித்தார் (ய-159)



வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவை முன்னிட்டுச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் தொடர் விசேட நிகழ்வுகளின் மூன்றாம் நாள் நிகழ்வு அண்மையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் செயலாளரும், ஆசிரியருமான இரா.செல்வவடிவேலின் மகாபாரதச் சொற்பொழிவும் நடைபெற்றது. (ய-66)



உடுப்பிட்டி தெற்கு பண்டகைப் பிள்ளையார் ஆலயத் தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்றது. (ய-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டவரைவுகளை மீளப்பெறுங்கள்

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, செப். 26

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டவரைவு ஆகியவற்றை உடனடியாக மீளப்பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

தமது உறுப்பினர்களுடன் கலந்துரையாடாமல் ஆட்சியாளர்களால் தன்னிச்சையாக இவை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் சங்கம், அரசாங்கம் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்த முயற்சித்த பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் உட்பட எந்தவிதமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டாமெனவும் தெரிவித்துள்ளது. (அ-ஒ-6)

# பாடப்புத்தகம் அச்சிடல் பணிகளில் நேர்த்தி

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டு பாடப்புத்தகங்களை அச்சிடும் பணி குறைந்த செலவில் உரிய நேரத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் 2024ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தங்களை விநியோகிக்க ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவிலுள்ள கல்வி வெளியீடுகள் திணைக்களத்தின் பிரதான களஞ்சியசாலையிலிருந்து பிராந்திய மத்திய நிலையங்களுக்கு பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படும் இடத்தை பார்வையிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கொரோனாத் தொற்று, பொருளாதார நெருக்கடி உள்ளிட்டவற்றால் சீர் குலைந்த அனைத்துக் கல்வி நடவடிக்கைகளும் மீட்டெடுக்கப்பட்டு வருகின் றன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு பாடப்புத்தகங்களை குறைந்த செலவில், உரிய நேரத்தில் அச்சிட்டு முடித்து நான்காயிரம் மில்லியன் ரூபாவைச் சேமிக்க முடிந்துள்ளது. அரச அச்சக கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டத் தொடங்கியுள்ளது.

அந்த வகையில் 2024ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அடுத்த வருடத்துக்கான பாடப்புத்தகங்களை பாடசாலை மாணவர்களுக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன- என்றார். (ச-இ)

### தமிழர்...

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகி 12 நாள்கள் நீடித்து செப்ரெம்பர் 26ஆம் திகதி திலீபனின் உயிர் பிரிந்தது. ஒரு சொட்டு நீரும் அருந்தாமல் அஹிம்சை வழியில் போராடிய திலீபன் இலங்கை மற்றும் இந்திய அரசுகளால் சாகடிக்கப்பட்டான். அவன் ஈகச்சாவை அணைத்து 36ஆண்டுகள் இன்றுடன்பூர்த்தியாகின்றன.

தியாக தீபம் திலீபனை திருஉருவம் தாங்கிய நினைவு ஊர்திகள் நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவிடத்தை வந்தடையவுள்ளன. அதே வேளை தியாக திலீபனின் சொந்த ஊரில் அவரது வீட்டின் முன்பாகவும் இன்று நினைவேந்தல் நடைபெறவுள்ளது. அதேபோன்று தியாகி திலீபன் உணவு தவிர்ப்பு நடத்தி உயிரிழந்த நல்லூர் கோயில் வடக்கு வீதியில் உள்ள இடத்திலும், நல்லூர்ப் பின்வீதியில் அமைந்துள்ள நினைவுத்தூபியிலும் நினைவுகூரலுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. தாயகத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு தியாக தீபத்தின் எழுச்சி கீதங்களும் இசைக்கவிடப்பட்டுள்ளன.

இதேவேளை - நினைவேந்தல் நடக்கும் இடங்களில் படைப்புலனாய்வாளர்களும் தமது கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### பருத்தித்துறையில்...

திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

நிகழ்வில் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் பங்கேற்று அஞ்சலி செலுத்தியிருந்தனர். (அ-ஒ-100)

### புதிய...

சட்டவரைவு என்பன ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகும். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்படி சட்டவரைவுகளை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னாள் அமைச்சரான சட்டத்துறை பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டவரைவு என்பன மனித உரிமைக்கு அச்சுறுத்தலாக உள்ளது. ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவே சரி எது, பிழை எது என்பதைத் தீர்மானிக்கும். இதன்மூலம் அரசுக்கு எதிராக எவராவது கருத்து வெளியிட்டால், அது போலி தகவல் எனக் குறிப்பிட்டு, நடவடிக்கை எடுக்கப்படலாம்.

எமது நாட்டு ஊடகங்களுக்கு மட்டுமல்ல 'ஒன்லைன்' சேவையை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் உத்தேச சட்டங்களின் பிரகாரம் தாக்கம் ஏற்படக்கூடும். ஆனால், மேற்படி சட்டவரைவுகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் அடிபணியும் என நாம் நினைக்கவில்லை - என்றார். (அ-ஒ-44)

### வாகன...

களுக்காக வாகன வரிப்பத்திரம் வழங்கல் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக வடக்கு மாகாண போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் திருமதி சி.சுஜீவா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில்; நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியிலிருந்து ஒன்லைன் ஊடாக வரி அனுமதிப்பத்திரம் பெறும் முறை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள் ளது. இது மீண்டும் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் வழமைக்குத் திரும்பும். கருமபீடங்களூடாக வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் சகல செயற்பாடுகளும் இன்று பிற்பகல் 3 மணியுடன் தற்காலிகமாக நிறுத்திக்கொள்ளப்படும். எதிர்வரும் 2ஆம் திகதி வரையில் நாடு முழுவதும் வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் செயன்முறை நடைமுறைப்படுத்தப் படமாட்டாது.

பொதுமக்களின் நலன்கருதி நாளை தொடக்கம் எதிர்வரும் 6ஆம் திகதி வரையான இடைப்பட்ட காலப்பகுதியில் முடிவடையும் வாகன வருமானவரி அனுமதிப்பத்திரங்களுக்கான தண்டப்பணம் அறவிடப்படுவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

பின்னர் மீண்டும் வாகன வருமானவரி வழங்கும் செயற்பாடானது எதிர்வரும் 3ஆம் திகதி பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படும். இப் பரீட்சார்த்த காலப்பகுதி முடிவடையும் வரை வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் மட்டுமே வழங்கப்படும் என்பதுடன் ஏனைய மாகாணங்களுக்கான வாகன வருமானவரி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் செயற்பாடானது பின்னர் நாடளாவிய ரீதியில் அறிவிக்கப்பட்டு ஆரம்பிக்கப்படும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

### திலீபனின்...

குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களால் திலீபனின் வரலாற்றைப் பேணும் வகையில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுர நடவடிக்கையை இடைநிறுத்த, பல்வேறு வழிகளிலும் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன. இதில் அரச நிர்வாக இயந்திரம் மட்டுமல்லாது படைப்புலனாய்வாளர்களும் அதிதீவிரமாக ஈடுபட்டதோடு, மாணவர்களைத் தொலைபேசியூடாக அச்சுறுத்தும் பாணியில் உரையாடியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

### புலிகளின்...

2009 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் விடுதலைப் புலிகளால் வெடிபொருள்கள் மற்றும் தங்கம் என்பன இந்தப் பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதன் அடிப்படையில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

கடற்கரையிலிருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் ஆலமரம் ஒன்றும் சிறு பனை வடலிகளும் காணப்படும் மணல்பிட்டி கொண்ட பகுதியே அடையாளப்படுத்தப்பட்டு தோண்டப்பட்டது.

நேற்று பி.ப 3 மணி தொடக்கம் 6 மணி வரைதோண்டப்பட்டபோது நிலத்துக்குள் இருந்து தகரங்களும், ஒலிநாடா ஒன்றும் மீட்கப்பட்டுள்ள நிலையில் மேலும் நிலத்தைத் தோண்ட நீர் வரத் தொடங்கியுள்ளது. இதையடுத்து அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இன்று அகழ்வுப்பணி மீள ஆரம்பமாகும். (அ-ஒ-19)

### ஐ.எம்.எப்...

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேரில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மேற்கொள்ளப்படும் மீளாய்வு கலந்துரையாடலின் முதலாவது மீளாய்வின் இறுதிக் கலந்துரையாடலின் நிமித்தம் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவரை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அரசாங்கம் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதன் மூலம் உழைக்கும் மக்களின் ஊழியர் சேமலாப நிதிய மிகுதியில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புக் குறித்தும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐ.எம்.எப். பிரதிநிதிகளிடம் தெளிவுபடுத்தினார். (அ-ஒ-44)

### கைதான...

அத்தோடு பிரதிவாதிக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி கஹவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் சிலர் காயமடைந்திருந்தனர்.

துப்பாக்கிச் சூடு தொடர்பில் விசாரணை நடத்திய கஹவத்தை பொலிஸாரால் சம்பவம் தொடர்பில் சந்தேகநபராக அடையாளங்காணப்பட்ட அப்போதைய பிரதியமைச்சர் பிரேமலால் ஜயசேகரவை கைது செய்வதற்கு ஆயத்தமான வேளை, அவரைக் கைது செய்ய வேண்டாம் என கஹவத்தை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய பொறுப்பதிகாரிக்கு அழுத்தம் கொடுத்தமை தொடர்பில் லலித் ஜயசிங்க மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இதேவேளை - லலித் ஜயசிங்க வடக்கு மாகாணத்திலிருக்கும்போது, புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேகநபர் ஒருவரை தப்பிக்க வைக்க உதவினாரெனக் கைதாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலிண்டர் திருடியவர் மடக்கிப்பிடிப்பு

யாழ். செப்.26

எரிவாயு சிலிண்டரைத் திருடிய குற்றச்சாட்டில் சுதுமலையில் ஒருவர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வீடொன்றுக்குள் புகுந்த சந்தேகநபர் வீட்டிலிருந்தஎரிவாயு சிலிண்டரை திருடிக்கொண்டு வெளியே வந்தபோது அந்தப் பகுதி பொதுமக்கள் அவரை மடக்கிப்பிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேககநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்படும் என்று மானிப்பாய்பொலிஸார்தெரிவித்தனர். (எ-125)




## சடலத்தை பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விடுதி 8இல் அனுமதிக்கப்பட்ட நல்லூராஜ் (வயது-63) என்பவர் கடந்த 20ஆம் திகதி உயிரிழந்துள்ளார். அவரது சடலத்தை இதுவரை எவரும் உரிமை கோரவில்லை. குறித்த நபரின் சடலத்தை அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச)

## தொழிற்சங்கத்தை உடன் அங்கீகரிக்குக

### பிரீமா ஊழியர்கள் போராட்டம்

திருகோணமலை, செப். 26

திருகோணமலை பிறீமா ஆலைத்தொழிலாளர்களின் தொழிற்சங்கமான 'அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தை' பிறீமா தொழிற்சாலை நிர்வாகம் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கமாக ஏற்றுக்கொள்ளாமையை எதிர்த்து நேற்றுக்காலை தொழிற்சங்கத்தால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்பட்டது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது: 'எமது சங்கம் கடந்த ஆண்டு தொழிற்சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டது. எனினும், பிறீமா நிறுவன நிர்வாகம் இன்றுவரை எங்களின் சங்கத்தை அங்கீகரிக்கவில்லை. 460 தொழிலாளர்களில் 280 தொழிலாளர்கள் எமது சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளனர். மொத்தத் தொழிலாளர் தொகையில் 40 வீதமானவர்கள் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கம் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பது தொழிற்சங்கச் சட்டமாகும். எனவே பிறீமா நிர்வாகம் எங்களின் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும்' - என்றனர். (ம-50)

## மாலைதீவுக்கு முட்டைகள் ஏற்றுமதியாம்

கொழும்பு, செப். 26

இலங்கையில் இருந்து மாலைதீவுக்கு மாதாந்தம் 1.5 மில்லியன் முட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கன்னோருவை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த ஆண்டுக்குள் மேலும் 4 நாடுகளுக்கு முட்டைகளை ஏற்றுமதி செய்யப் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் முட்டை உற்பத்தி அதிகரித்து நாட்டில் முட்டையில் விலை குறைவடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

## உள்ளூர் அபிவிருத்தி: மக்களிடம் ஆலோசனை

யாழ்ப்பாணம், செப். 26

வலிகாமம் தெற்கு பிரதேசசபை யால் உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் 2023 - 2024 ஆம் ஆண்டில் முன்னெடுக் கப்பட வுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் மக்கள் கருத்துகள் பெறப்படவுள்ளன.

இந்தக் கருத்தறிதலுக்கான கூட்டம் பிரதேசசபையின் தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பொதுமக்கள், பொது அமைப்புகள் கூட்டத்தில் பங்கேற்று பிரதேச அபிவிருத்தித்திட்ட ஆலோசனைகளை வழங்குமாறு பிரதேசசபை அறிவித்துள்ளது. (ச)


**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- Delivery boy
- உணவு பரிமாறுபவர்

**077 755 5456**

(cs 52277) N-1

**காவலாளி தேவை**

யாழ். நகரில் இயங்கிவரும் ஈசன்ஸ் அந்தியகால சேவை நிலையத்திற்கு இரவு நேர காவலாளி தேவை.

**076 5846 523**
**076 1672 593**

(CS 26379)A-1

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி வீதி, திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் 5 பரப்பு 3.5 குழி காணியுடன் பாரிய களஞ்சிய வசதி அமையப்பெற்ற காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு இல: **077 3866 250**

**சிறுநீரகம் தேவை**

A- வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

தொடர்புகளுக்கு:

**077 4146 225**




## திலீபனின் நினைவுக்காக மரக்கன்றுகள் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 26

தியாகதீபம் திலீபனின் நினைவுதினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் மருதனார் மடத்தில் பயன்தரு மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன.

சேர். பொன்.இராமநாதன் அரங்காற்றுகை மற்றும் கட்புலக் கலைகள் பீட மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தது. சம நேரத்தில் தியாக தீபம் திலீபனின் அகிம்சைப் பயணத்தின் வரலாற்றை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரமும் விநியோகிக்கப்பட்டது. (ம-125)


**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 33 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- **077 6234 204**
**076 7558 606**
**077 076 0389**

(CS 26380) A-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org